I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
M.C.O.P.NO.512/2022

| | | |
|---|---|---|
| Name | : | Panghacham |
| Designation | : | Senior Superintendent, TNSTC, Villupuram |
| Age | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.07.2025**

**விசாரணை தொடங்கிய நேரம் :**01.10 p.m

**முதல் விசாரணை**

நான் தற்போது TNSTC, Viillupuram தில் Senior Superintendent ஆக பணி செய்து வருகிறேன்.இந்த வழக்கில் இறந்துபோன பரந்தாமன் நடத்துனராக வேலூர் மண்டலம், கொணவட்டம் , பணிமனை –2 ல் பணி செய்து வந்தார். அவர் நிரந்திர பணியாளர்.அவர் கடைசியாக ஒரு நாள் ஆகஸ்ட் 22 ம் தேதி மட்டும் தான் வரவில்லை. அந்த ஒரு நாள் விட்டு விட்டு சம்பளம் வழங்கியுள்ளோம். மொத்த சம்பளம் ரூ. 28,396.97/– வழங்கியிருக்கிறோம்.

ம.சா.ஆ. 14 – இறந்த பார்த்திபன் என்பவரின் சம்பள சான்று(ஜனவரி 2022 முதல் ஆகஸ்ட் 2022 வரை)

**குறுக்கு விசாரணை**

அவர் பணிக்காகதான் வந்து கொண்டிருந்தார். அவருக்கு காலை 05.30 மணிக்கு பணிக்கு ஆஜராக வேண்டும். அதனால் 06.00 மணியளவில் பணிக்கு வரும் வழியில் விபத்தில் இறந்துவிட்டார். அழைப்பாணை regional Manager அவர்களுக்கு வந்தது. அவர் எனக்கு எந்த அதிகார கடிதமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவருக்கு சாதாரணமாக சம்பளம் accounts department லிருந்து போகும் என்றால் ECS மூலமாக கணக்கு

பிரிவில் உள்ள துணை மேலாளர் அவரவர்கள் வங்கி கணக்கிற்கு சம்பளம் போடப்படும். அவருடைய வங்கி கணக்கிற்கு மாத மாதம் எவ்வளவு செலுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் ஆனால் ஆவணம் மூலம் தெரியும். ஆடிட் மற்றும் நிர்வாகத்துணையும் ஒன்றுதான். அவருடைய basic pay, increment கொடுக்கும்போது அவருடைய basic pay மாறும். அவருடைய பணி பதிவேட்டை நான் எடுத்து வந்துள்ளேன். அதன் முதல் பக்க நகல் தாக்கல் செய்துள்ளேன். அவருக்கு மெமோ எதுவும் வழங்கப்படவில்லை. அவர் நினைத்தால் VRS வாங்கலாம் என்றால் 20 வருடம் சர்வீஸ் இருக்க வேண்டும் அல்லது 50 வருடம் ஆகியிருந்தால் VRS வழங்கப்படும். compassionate ground ல் யாருக்கும் பணி கொடுத்தோமா என்றால் அவர்கள் யாரும் பதிவு செய்யவில்லை. அசல் ஆவணங்கள் சம்மந்தப்பட்ட நபர் யார் இருக்கிறார்களோ அவர்களிடம் கொடுத்துள்ளோம். இறந்த பிறகு இறந்தவரின் இறப்பு மற்றும் பணி கொடைகள் அவருடைய வாரிசுகளுக்கு வழங்கவில்லை.

**விசாரணை முடிந்த நேரம் :** 01.20 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.